




# ஹர ஹர சங்கரா



FREE COPY

October - 2025

Vol. 4 - ISSUE 12

# KODAMBAKKAM TIMES



# SUSWAAD

## THE NAME FOR HIGH QUALITY TRADITIONAL SWEETS AND SAVOURIES

3/2, Venkatraman Street,
T. Nagar, Chennai - 600 017.
Ph.: 2815 5558,
2815 2678

## ITEMS AVAILABLE FOR DEEPAVALI

## 20.10.2025 (MONDAY)

**Sales : Subject to availability of stocks only**

| | | | |
|---|---|---|---|
| Mixture | மிக்சர் | Laddu | லட்டு |
| Ribbon Pakoda | ரிப்பன் பகோடா | Badhusha | பாதுஷா |
| Karasev | காராசேவ் | Athirasam | அதிரசம் |
| Kara Boondhi | காராபூந்தி | Maa Laadu | மாலாடு |
| Thattai | தட்டை | Thirupaagam | திருபாகம் |
| Thenkuzhal | தேன்குழல் | Okkarai, other traditional sweets etc., | |
| Diwali Marundhu | தீபாவளி மருந்து | | |

**BRANCHES**

10/3, Madhans Apartment, Ground Floor,
South Canal Bank Road, Opp. St. Johns School,
Mandaveli, Chennai - 600 028
Ph.: 2495 0978, Cell: 99406 54138

No.9/A, Kalinga Colony, P. T. Rajan Salai,
K.K. Nagar, Chennai - 600 078
Opp. Shakthi Vinayagar Temple, Near Sivan Park.
Ph.: 2366 2300 Cell : 97899 76111

# KRISHNA DELISH COFFEE




## எங்களிடம் தரமான காபி
## கொட்டை அரைத்து தரப்படும்

## 1 கிலோ காபி பவுடர்
## ரூ 920 மட்டுமே

---

## நம்ம ஆத்து காபி

## FILTER COFFEE RS. 20 only

**COFFEE POWDER**
**DOOR DELIVERY FREE**
**ALSO AVAILABLE**

* Condition Apply

No. 1 & 2 Murthy Street,
Arya Gowda Road, West Mambalam,
Next to Ayodhya Mandabam. Ch-33.

Ph : 9941578181
7010878478

# ஸ்நானம் என்பதை எங்கெங்கு எப்படிச் செய்ய வேண்டும்



........ மகா பெரியவா

ஸ்நானம் என்றால் நதியில் நீராடுவது அல்லது பக்கெட்டில் இருந்து எடுத்து உடலில் ஊற்றிக்கொள்வதும் பளிச் சென்று நம் நினைவுக்கு வரும். ஸ்நானம் என்பதை எங்கெங்கு எப்படிச் செய்ய வேண்டும் என்பதை நமது சாஸ்திரங்களில் இருந்து தெளிவாக தெரிந்துகொள்ள முடிகின்றது.

ஸ்நானங்கள் இரு வகையாகப் பிரிக்கப்படுகின்றன. அவைகளில் முக்கிய ஸ்நானம் கௌண ஸ்நானம் ஆகும். க்ரியா ஸ்நானம், காம்ய ஸ்நானம், நைமித்திக ஸ்நானம், க்ரியாங்க ஸ்நானம், மலாபாஹர்ஷண ஸ்நானம், நித்ய ஸ்நானம் ஆகியவை முக்கியமானவை.

**க்ரியா ஸ்நானம் :** பவித்திரமான புண்ணிய நதிகளில் நீராடுவதுதான் க்ரியா ஸ்நானம். நதிகளில் நீராடும்போது நதியின் நீரோட்டம் எந்தப் பக்கம் இருக்கிறதோ அதற்கு எதிர்முகமாக நின்றுகொண்டு (நீரோட்டத்தை எதிர்த்தாற்போல்) நீரில் நன்கு மூழ்கி ஸ்நானம் செய்ய வேண்டும்.

**காம்ய ஸ்நானம் :** ஒரு சிலருக்கு பரிகாரத்துக்காக சில கோவில்களில் இருக்கும் குளங்களில் ஸ்நானம் செய்ய நேரிடும். அவ்வாறு குளிக்கும்போது, வேறு


SREE MANGALAGURU JOTHIDA NILAYAM

'VAAZHVIL VELICHAM'

SURESH MADHAVAN

93609 45818

(With Appointment Whatsup Only)

எதைப் பற்றியும் கவலைப்படாமல் சூரியனைப் பார்த்து நின்றுகொண்டு குளத்தில் மூழ்கி ஸ்நானம் செய்ய வேண்டும்.

**நைமித்திக ஸ்நானம் :** சூரிய கிரகணம், சந்திர கிரகணம், துக்க தீட்டு, பிரசவத் தீட்டு, க்ஷவரத் தீட்டு, தம்பதியர் சேர்க்கைத் தீட்டு இவற்றுக்காகச் செய்யப்படும் ஸ்நானமே நைமித்திக ஸ்நானம் ஆகும். இந்தத் தீட்டைக் களைய குளங்களில் சூரிய அஸ்தமனத்துக்குப் பிறகு நீராட நேர்ந்தால் கிழக்கு நோக்கியபடி நின்றுகொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும். அதைத் தவிர கிணற்றங்கரையிலோ, பாத்ரூமிலோ குளிப்பவர்கள் கிழக்கு முகமாகப் பார்த்த வண்ணம் ஸ்நானம் செய்ய வேண்டும்.

**க்ரியாங்க ஸ்நானம் :** ஹோமம், ஜபம், பித்ருகர்மா முதலியவை செய்வதற்காக நீராடுவதுதான் க்ரியாங்க ஸ்நானம். ஹோமம், ஜபம் முதலியவை செய்வதை முன்னிட்டு ஸ்நானம் செய்யும்போது கிழக்கு திக்கைப் பார்த்தும், பித்ருகர்மா செய்யும்போது தெற்கு திக்கைப் பார்த்தபடியும் நின்று கொண்டு ஸ்நானம் செய்ய வேண்டும்.

**மலாபாஹர்ஷன ஸ்நானம் :** சரும வியாதிகளைப் போக்கிக் கொள்ள, தைலங்கள் தேய்த்துக்கொண்டு குளித்தல் மற்றும் எண்ணெய் தேய்த்துக் குளிப்பதற்கு மலாபாஹர்ஷண ஸ்நானம் என்று பெயர். இந்த ஸ்நானத்துக்கும் கிழக்கு நோக்கித்தான் நீராடவேண்டும். சூரிய உதயத்துக்குப் பின் உச்சிவேளைப் பொழுதுக்கு ஸ்நானம் செய்ய வேண்டும்.

**நித்ய ஸ்நானம் :** அன்றாடம் உடலிலுள்ள அழுக்கைப் போக்கிக் கொள்வதற்காகச் செய்யப்படும் ஸ்நானமே நித்ய ஸ்நானம் எனப்படுகிறது. சாஸ்திரத்தில் தினமும் மூன்று முறை ஸ்நானம் செய்ய வேண்டும் என்று கூறப்படுகிறது.

**கௌண ஸ்நானம் :** மேற்கூறிய முக்கிய ஸ்நானங்களுக்குப் பதிலாக தேக ஆரோக்கியம் காரணமாக சாஸ்திரத்தில் கூறிய முறைப்படி அல்லாமல் மாற்று முறையில் செய்யப்படுவதுதான் கௌணஸ்நானம். உதாரணமாக தலையில் ஜலம் ஊற்றிக்கொள்ள உடல்நலம் இடம் தராமல் கழுத்தோடு குளிப்பது அல்லது அதுவும் முடியாமல் மஞ்சள் கலந்த நீரை ப்ரோக்ஷித்துக்கொண்டு விபூதியை

You can advertise for your Rental, Real Estate, Situation Vacant etc.,

**KODAMBAKKAM TIMES**

**MAMBALAM & T NAGAR EDITION**

**COVERING AREA : Choolaimedu, Kodambakkam, Mambalam & T Nagar**

**K K NAGAR & VADAPALANI EDITION**

**COVERING AREA :**

**Ashok Nagar, Ramapuram, Virugambakkam & Valasaravakkam**

**044 2484 4114 / 93826 82128 / 89390 70034**

E-mail : kodambakkamtimes@yahoo.com

இட்டுக்கொள்வது போன்றவை முக்கிய விதியைத் தவிர்த்து கௌணவிதியை அனுசரித்து மேற்கொள்ளும் முறையாகும். சாஸ்திர முறைகள் ஒருபக்கம் இருக்க லௌகிகமாக பஞ்ச ஸ்நானங்கள் எனபதும் உண்டு. அதாவது பஞ்சபூதங்களின் சக்திகள் நம்மை இயக்குகின்றன என்பதை பஞ்ச ஸ்நானங்களின் மூலம் லோகாயதமாக அறிந்துகொள்ள முடிகிறது.

1. அக்னி சம்பந்தமுடைய பஸ்மத்திலிருந்து விபூதி கிடைப்பதால் விபூதி தரித்துக்கொள்வதை ஆக்நேய ஸ்நானம் என்றும் தேயுவுக்கு சம்பந்தமாகவும் கூறப்படுகிறது.

2. பசுக்கள் செல்லும்போது அவற்றின் குளம்படிகளிலிருந்து கிளம்பும் மண் காற்றின் மூலம் மேலே படுவது சிரேஷ்டமாகக் கூறப்படுகின்றது. அதற்கு வாயவ்ய ஸ்நானம் என்று பெயர். இது வாயுவின் பெயரால் பெறப்படும் ஸ்நானம்.

3. சாதாரணமாக வெறுமனே நீரை மட்டும் தேகத்தில் விட்டுக்கொண்டு குளிப்பது வாருண ஸ்நானம் அதாவது வாருணம்தான் அப்பு என்பது.

4. மந்திரங்கள் யாவும் ஆகாசத்தில் ஒலியாக வியாபித்திருக்கின்றன அவைகளை பூஜைகளின்போதும், ஹோமங்களின்போதும் ஒரு கலசத்தில் இருக்கும் நீரை மந்திரங்கள் கூறியபடி தர்ப்பையால் புரோகிதர் நம்மேல் தெளிப்பதற்கு ப்ராஹ்ம ஸ்நானம் என்று பெயர். பஞ்சபூதங்களில் ஆகாயத்துக்கானது இது.

5. நடக்கும்போது பசுக்களின் குளம்படி மண்ணானது வாயுதேவனின் உதவியோடு நம்மேல் பட்டாலும் அந்த மண்ணானது (கோ தூளி) ஒருவரைப் புனிதமாக்குவதாக கூறப்படுகிறது. மேலும், ரோக நிவாரணத்துக்காக மேனியில் பூசப்படும் புற்றுமண் போன்றவையால் இதை மிருத்திகை ஸ்நானம் என்கிறார்கள். இவை இரண்டுமே ப்ருத்விக்காகக் கூறப்படுகிறது. இவையெல்லாவற்றையும்விட விசேஷமாகவும், ஸ்ரேஷ்டமாகவும் சொல்லப்படுவது திவ்ய ஸ்நானம் என்பது அதாவது வெயில் காயும்போதே சில சமயங்களில் மழைத் தூறல்களும் சம்பவிக்கும் அப்போதைய மழைத்துளிகள் தேவலோகத்தில் இருந்துவரும் தீர்த்தத்துக்குச் சமமாகக் கருதப்படுகின்றது. அப்படிப்பட்ட வேளையில் எல்லோரும் அந்த புனித நீரில் அதாவது திவ்ய ஸ்நானத்தில் நனைந்து நம்மைப் புனிதப்படுத்திக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ ஸ்ரீ மகா பெரியவா கூறியிருக்கிறார்.

**இது பெண்களுக்கு மட்டும் :** விசேஷ தினங்களைத் தவிர மற்ற நாட்களில் பெண்கள் தலைக்குத் தண்ணீர் ஊற்றிக்கொள்ள வேண்டும் என்கிற அவசியமில்லை. மஞ்சள் தண்ணீரை தலைக்கு புரோக்ஷணம் செய்து கொண்டாலே போதும் என்று சாஸ்திரத்தில் கூறியிருக்கிறது என்கிற தகவலையும் ஸ்ரீ ஸ்ரீ மகா பெரியவா தெரியப்படுத்தியிருக்கிறார். ஸ்நானம் என்பது மனதில் ஆழமாக பதியவைத்துக்கொண்டு நீராட வேண்டும். ஒவ்வொரு முறை ஸ்நானம் செய்யும்பொழுதும்

கங்கேச யமுநே சைவ கோதாவரீ ஸரஸ்வதீ
நர்மதே ஸிந்து காவேரி ஜலேஸ்மின் ஸந்நிதிம் குரு

என்கிற ஸ்லோகத்தைக் கூறி ஸ்நானம் செய்தால் ஏழு புண்ணிய நதிகளிலும் ஸ்நானம் செய்த பலன் கிட்டும்.

# மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள் அப்படியென்றால் என்ன தெரியுமா?

தினசரி நாள்காட்டியை தினமும் நாம் பயன்படுத்தினாலும் அதில் உள்ள ஒரு சில விஷயங்களை நாம் தெரிந்து கொள்ளாமலேயே இருக்கிறோம். அந்த வகையில் தினசரி நாள்காட்டியில் உள்ள ஒரு விஷயமே மேல் நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் போன்ற நாட்கள் அனைத்து நாள்காட்டியிலும் இருக்கும்.

ஆனால் நாம் அதை பொதுவாக, "மேல்நோக்கு" என்றால் "நல்ல நாள்" என்றும், "சமநோக்கு" என்றால் "சுமாரான நாள்" எனவும், "கீழ்நோக்கு நாள்" என்றால் "கெடுதலான" நாளாகவும் எண்ணி அந்த நாட்களில் தவறான காரியங்களில் ஈடுபடுகிறோம்.

மேல்நோக்கு நாள், கீழ்நோக்கு நாள், சமநோக்கு நாள் இவை மூன்றும் அன்றைய தின நட்சத்திரத்தின் அடிப்படையில் அமைகின்றன.

நட்சத்திரங்கள் மொத்தம் 27 இவைகளை நம் முன்னோர்கள் ராசிமண்டல அடிப்படையில் மூன்றாக பிரித்தனர். அவை "ஊர்த்துவமுக" நட்சத்திரம், "அதோமுக" நட்சத்திரம், "த்ரியமுக" நட்சத்திரம் ஆகும்.

"ஊர்த்துவமுக" நட்சத்திரங்கள் அவை ரோகிணி, திருவாதிரை, பூசம், உத்திரம், உத்திராடம், திருவோணம், அவிட்டம், சதயம், உத்திரட்டாதி ஆகியவையாகும். இந்த நட்சத்திரங்களைக் கொண்ட நாட்கள் "மேல்நோக்கு நாட்கள்" எனப்படும். இந்நாட்களில் "மேல்நோக்கி" வளர்கின்ற பயிர்களுக்காக விதை விதைத்தல், மரங்களை நடுதல் மேல்நோக்கி எழும் கட்டிடங்கள் (வீடு), உயரமான மதில் போன்றவற்றைக் கட்ட ஆரம்பிக்க உரிய நாட்கள் ஆகும்.

இரண்டாவதாக "அதோமுக" நட்சத்திரங்கள் அவை பரணி, கிருத்திகை, ஆயில்யம், மகம், பூரம், விசாகம், மூலம், பூராடம், பூரட்டாதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள் கொண்ட நாட்கள் "கீழ்நோக்கு நாள்" எனப்படுகிறது. இந்த நாட்களில் கிணறு வெட்டுதல், புதையல் தேடுதல், சுரங்கப் பணிகளை மேற்கொள்ளுதல், பூமிக்கடியில் வளரும் கிழங்கு வகைச் செடிகளைப் பயிரிடுதல் முதலான பணிகளைச் செய்வது நல்லது.

மூன்றாவது "த்ரியமுக" நட்சத்திரங்கள் அவை அஸ்வினி, மிருகசீரிஷம், புனர்பூசம், ஹஸ்தம், சித்திரை, சுவாதி, அனுஷம், கேட்டை, ரேவதி ஆகிய ஒன்பது நட்சத்திரங்கள் கொண்ட நாட்கள் "சமநோக்கு" நாட்கள் எனப்படும் இந்த நாட்களில் வாகனங்கள், கார், பைக் வாங்குதல், செல்லப்பிராணிகள், ஆடு, மாடு, காளை வாங்குதல், சாலை அமைத்தல், வாசக்கால் வைத்தல், வயல் (ஏறு) உழுதல் ஆகிய பணிகளைச் செய்வது உத்தமம்.



# பக்தி

ஒரு தெரு நாய் சிவாலய வளாகத்துக்கு அருகே எப்போதுமே திரிந்து கொண்டிருக்கும். அது அந்த ஊரில் போடப்படும் எச்சில் இலை உணவுகளை சாப்பிட்டு வாழ்ந்து வந்தது. இப்படியாக வாழ்ந்து வந்த காலத்தில் அந்த ஊரின் சிவாலயத்தில் திருவிழா தொடங்கியது. அந்த ஊரில் அனைவருமே திருவிழா பத்து நாட்களுமே விரதம் இருந்தார்கள். விரத காலங்களில் சாப்பிட்ட இலைகளை நாய்க்கு போடக்கூடாது என்ற ஒரு நம்பிக்கையில் யார் வீட்டிலுமே எச்சில் இலைகளை தூக்கி வெளியே போடவே இல்லை. நாய்க்கு எச்சில் இலையே கிடைக்காததால் பசி தாங்க முடியாமல் கோயிலின் ஓரத்தில் வந்து படுத்து கிடந்தது. அப்போது அந்த சிவாலயத்தில் இராமாயணம் பற்றி பேச்சாளர் ஒருவர் பிரசங்கம் பண்ணி இராமேஸ்வர தல மகிமையை விளக்கமாகவே பேசினார். அதனை அப்போது அந்த நாயும் காது கொடுத்து கேட்டதாம். ஆஹா இராமேஸ்வரத்துக்கு இத்தனை மகிமையா? எல்லோரும் போகணும்னு சொல்றாங்களே? நாமும் தான் இப்படியே எச்சில் இலையை பொறுக்கி தின்றே காலத்தை கழித்து விட முடியுமா என்ன? போகிற வழிக்கு ஒரு புண்ணியம் சேர்க்க வேண்டாமா என்று எண்ணிய படியே இன்றிலிருந்து பத்து நாட்களும் விரதமாகவே இருந்து திருவிழா முடிந்ததும் கண்டிப்பாக இராமேஸ்வரத்திற்கு நடைபயணமாக போக வேண்டியது தான் என்று முடிவு செய்தது. தினமும் தொடர்ந்து கோயிலில் நடக்கும் பிரசங்கங்களை கேட்கவும் நாளடைவில் அதற்கு இராமேஸ்வரத்தின் மீதான பக்தி அளவு கடந்து அதிகமானது.

விரதத்தில் இருந்ததால், பசி கொடுத்த வைராக்கியம் வேறு இருப்பதால் திருவிழா முடிந்ததும் இராமேஸ்வரம் போயே தீருவது என்று உறுதியாக இருந்தது. திருவிழா பத்தாம் நாள் முறைப்படி திருவிழா நிறைவாகி கொடியை இறக்கினார்கள். நாயும் இராமேஸ்வரம் புறப்படத் தயாராகி நடை பயணத்தை தொடங்கியது. முதல் அடி எடுத்துவைத்த பொழுதே ஒரு வீட்டின் பின் பக்கத்தில் "பொத்" என்று ஒரு சத்தம் கேட்டது. திரும்பிப் பார்த்தால் ஆஹா என்ன மணம்? என்ன சுவை நல்ல கறி விருந்தாக இருக்கும் போலிருக்கிறதே நிறைய வேறு மிச்சம் வைத்து இலையை தூக்கி போட்டிருக்கிறான் புண்ணியவான் என்று எச்சில் இலையை தூக்கி போட்டவனை வாழ்த்திய படியே அதில் போய் வாயை வைத்து கொண்ட படியே நல்ல வேளை இந்நேரம் இராமேஸ்வரம் போயிருந்தால் இந்த கறி விருந்து கிடைத்திருக்குமா? என்று நினைத்து கொண்டதாம்.

இந்த நாய் தான் நமது ஆழ்மனம். நம் மனம் இருக்கிறதே ஆட்டம் போட எதுவும் கிடைக்காத பொழுது ரொம்ப அடக்கமாகவும், சுவாமி மீது பக்தி பண்ணுவது போலவும், நம்மை போல புண்ணியவான் யார் இருக்கிறார்கள் என்று எண்ணிக் கொண்டு நல்லவன் போலவே கபட வேஷம் போடும். ஆனால் தப்பு செய்யும் வாய்ப்பு கிடைத்ததோ இல்லையோ சாமியாவது, பூதமாவது அதுக்கெல்லாம் இன்னும் வயசு இருக்குதுய்யா. இப்பவே உத்ராட்சம் போட்டுகிட்டு, திருநீறு பூசிக்கிட்டு காசி இராமேஸ்வரம்னு போய்ட்டா வாழ்க்கையை எப்பத்தான் அனுபவிக்கிறது எனவும் கேட்கும், ஏதாவது கஷ்டம் வந்து விட்டால் உடனே கோயில், குளம், சாமி ஞாபகம் எல்லாம் அப்போது தான் வரும். இதுவே வாழ்க்கை சுமூகமாக ஆகிவிட்டால் பழைய படியே ஆட்டம் போடும். இதுதான் நம்மில் பெரும்பாலரது செயற்கையான கடவுள் வழிபாடும் கூட.

துன்பம் வரும் போது கடவுளைப் பற்றி நினைப்போம், உருகுவோம். சிக்கலின்றி நன்றாக வாழும் போது கடவுள் வழிபாட்டுக்கு இன்னும் நமக்கு வயது இருக்கிறது என்று நினைப்பதோடு அல்லாமல் இளமையில் சாமி கும்பிடுபவர்களையும் கெடுப்போம், கிண்டலடிப்போம்.

---

# தெய்வங்களுக்கு பேரன் பேத்திகள் உண்டா?

ஹிந்து மதத்தில் சிரார்த்தம் தரும்போது குறைந்தது ஐந்து தலைமுறை முன்னோர் பெயரை சொல்லி தருவார்கள். கங்கை கரைக்கு சென்று தருகிறவர்கள் பதினெட்டு தலைமுறை பெயரைச் சொல்லி தருவதாகவும் கேள்வி பட்டிருக்கிறோம். இதில் ஆச்சர்யமான விஷயம் என்னவென்றால் அந்தந்த ஊரில் சிரார்த்தம் தரும் பிராமணர் அந்த ஊரில் வசித்த எல்லோருடைய ஐந்து தலைமுறை பெயரையும் நினைவில் வைத்திருப்பார். இப்படியாக நம் தர்மத்தில் வம்சாவழியின் record maintenance வந்திருக்கிறது. சாதாரண குடிமக்களுக்கே இந்த வழக்கம் இருக்கிறதென்றால் மன்னர்களுக்கும், அவர் பரம்பரைக்கும் இல்லாமல் இருந்திராது இல்லையா? அதே போல இந்த record maintenance என்பது நம் வாழ்வியலில் பின்னிப் பிணைந்திருந்தது என்பதும் ஊர்ஜிதமாகிறது இல்லையா?

நமக்கு புராண இதிகாசங்களில் இப்படியான பரம்பரை விபரங்கள் இருக்கவே செய்கின்றன. ஆனால் எத்தனை துல்லியமான விபரங்கள் இருந்தாலும் அவற்றை கற்பனை கதை என்று புறந்தள்ளிவிட்டு நக்கலடிப்பதுதான் பகுத்தறிவு என்று நம்புகிறவர்கள் இருக்கத்தான் செய்கிறார்கள். ஆனால் நாம் விரும்புகிறவர்களுக்கு சில விபரங்கள் புரிந்தால் ஆர்வம் ஏற்படும்.

விஷ்ணுவின் உந்தி தாமரையிலிருந்து தோன்றியவர் பிரம்மா, பிரம்மனின் மானச புத்திரர்கள் - சனகாதி முனிவர்கள் நால்வர் (சனகர், சனந்தனர், சனாதனர், சனத் குமாரர்) ருத்ரன், பிரஜாபதிகள் - மரீசி, அத்திரி, அங்கிரசர், புலஸ்தியர், புலகர், தட்சன், கிராது, கஷ்யபர், வசிஷ்டர் மற்றும் உலகின் முதல் ஆணும், பெண்ணுமான சுவாம்புகமனு - சதரூபா தம்பதியினர். முதலில் தோன்றிய சனகாதி முனிவர்கள் பிரம்மச்சாரிகள். அவர்களுக்கு வம்சம் இல்லை.

முதல் மனிதகுல ஆணும் - பெண்ணுமான மனு - சதரூபா தம்பதியினரின் மகன்கள் : பிரியவிரதன், உத்தானபாதன். மகள்கள் : பிரசுதி, அக்ருதி, தேவஹூதி.

முதல் மகன் பிரியவிரதன் மனைவி பர்ஹிஷ்மதி, சுரூபை அவனுடைய மகள் ஊர்ஜஸ்வதி. மகன்கள் கவி, சவணன், மகாவீரன், ஊர்த்துவரேதஸ். பிரியவிரதன் பேரன்கள் : உத்தமன், தாமஸன், ரைவதன்.



இரண்டாவது மகனான உத்தானபாதனுக்கு இரண்டு மனைவிகள். சுநீதி, சுருச்சி. சுநீதியின் மகன்தான் புகழ்பெற்ற துருவன். சுருச்சியின் மகன் உத்தமன்.

துருவன் பரம்பரையில் வந்தவன் பிரசீனபர்ஹி. அவருக்கு பத்து மகன்கள் பிரசேதனர்கள் என்று அழைக்கப்பட்டார்கள். மகள் ஆக்ருதியின் மகன் யக்ஞன் (விஷ்ணுவின் ஒரு அவதாரம். மகள் தக்ஷணா (லக்ஷ்மியின் அவதாரம்). மற்றொரு மகள் தேவஹூதி கர்தம பிரஜாபதியை மணந்தாள். இவளுடைய மகள்களுள் ஒருத்தி அனுசூயா. இந்த அனுசூயா மற்றொரு பிரஜாபதியும் சப்தரிஷிகளுள் ஒருவருமான அத்திரி மகரிஷியை மணந்து கொண்டாள். இந்த அனுசூயாதான் முப்பெருந்தேவர்களை கற்பின் வலிமையால் மழலைகளாக்கி உணவளித்த வரலாறு அனைவருக்கும் தெரியுமல்லவா?

அத்திரி, அனுசூயா தம்பதிக்கு பிறந்தவர்கள்தான் கோபத்துக்கு பெயர்போன முனி துர்வாசர், தத்தாத்ரேயர் மற்றும் சோமன் (சந்திரன்).

சந்திரனின் மகன் புதன், பேரன் ஆயு. ஆயுவின் மகன் புரூரவஸ். புரூரவஸின் மகன் நகுஷன். நகுஷனின் மகன் யயாதி. அதாவது சந்திரனின் ஐந்தாவது தலைமுறை யயாதி. யயாதிக்கு இரண்டு மனைவியர். தேவயானி, சர்மிஷ்டை. இவர்கள் இருவருக்குமாக யயாதிக்கு யது, துர்வசு, திரஹ்யு, அனு, புரு என ஐந்து மகன்கள். (இவர்கள் ஐவரும் முக்கியமானவர்கள்).

யது வம்சத்தில் வந்தவர்கள் யாதவர்கள். அதாவது கிருஷ்ணரின் வம்சம். துர்வசு வம்சத்தில் வந்தவர்கள் சேரர், சோழர், யவனர். திரஹ்யுவுக்கு பிறந்தவர்கள் போஜர்கள், அனுவுக்கு பிறந்தவர்கள் மிலேச்சர்கள், புருவின்

வழித்தோன்றல்கள் பௌரவர்கள்.

பிரஜாபதியும் சப்த ரிஷிகளுள் ஒருவருமான மரீச்சியன் மகன் காஷ்யபர். (இவர் ஹிந்து மத்தின் மிக முக்கியமானவர்) காஷ்யபரின் உண்மையான பெயர் பஷ்யகர். முக்காலத்தையும் "பார்க்கக் கூடிய" சக்தி இவருக்கிருந்தது. இவர் பல பெண்களை மணந்தார். நிறைய பிள்ளைகளை பெற்றார்.

பிரஜாபதி தக்ஷன் - திதி பிரஜாபதி அங்கீரசர் - சுரூபா தம்பதிக்கு பிறந்தவர்கள் உதத்யா, சம்வர்தன, பிரகஸ்பதி மற்றும் கண்வர். பிரகஸ்பதி புலஸ்தியர் மகன் விஸ்ரவஸ். விஸ்ரவஸூக்கும் ரிஷிகுமாரிக்கும் பிறந்தவன்தான் குபேரன். விஸ்ரவஸூக்கும் அரக்கர் குல தலைவர் மகள் சுமாலிக்கும் பிறந்தவர்கள் தான் ராவணன், கும்பகர்ணன், விபீஷணன், சூர்ப்பனகா அதாவது ராவணனுக்கு குபேரன் ளவநஜ செிவாநச.

பிரகஸ்பதி புலகரின் மகன்கள் கிம்புருஷர்கள், கர்த்தமர், கனகபீடர், கர்மசிரேஸ்தன், வரேயாம்சு, சகிஷ்னு ஆகியோர். கர்தமருக்கும் தேவஹூதிக்கும் பிறந்தவர்கள் ஒன்பது குழந்தைகள். (தேவஹூதி மனுவின் மகள்களுள் ஒருவர்)

தக்ஷன் - பிரசுதி (மனு + சதரூபாவின் மகள்களுள் ஒருத்தி) தம்பதிக்கும் நிறைய மகள்கள் உண்டு. அவர்களுள் குறிப்பிடத்தக்கவர்கள் அதிதி, திதி, தனு, கலா, தனயு, சின்ஹிகா, குரோதா, பிரதா, விஸ்வா, வினதா, கபிலா, முனி, கத்ரு, தாட்சாயினி (சதி தேவி) ரோகிணி, ரேவதி மற்றும் கார்த்திகை, கியாதி உள்ளிட்ட 27 நட்சத்திரங்கள் (ஏன் கார்த்திகேயரை கார்த்திகை பெண்கள் வளர்த்தார்கள் தெரிகிறதா? சதி தேவியின் சகோதரிகள் இவர்கள்) மற்றும் ரதி.

இதில் திதி, அதிதி, வினதா, கத்ரு முதலியோர் கஷ்யபரை மணந்தனர். தாட்சாயினி சிவனை மணந்தாள். ரதி - மன்மதனை மணந்தாள்.

கஷ்யபருக்கும் - அதிதிக்கும் பிறந்தவர்கள்தான் இந்திராதி தேவர்கள், 12 ஆதித்யர்கள் - விவஸ்வான் (சூரியன்), ஆர்யமன், த்வஷ்டிர், சாவித்ரர், பாகன், ததர், மித்ரா, வருணன், அம்சா, பூஷன், இந்திரன் மற்றும் வாமனனான விஷ்ணு. அதே கஷ்யபருக்கும் - அதிதியின் சகோதரியும் மற்றுமோர் மனைவியுமான திதிக்கும் பிறந்தவர்கள்தான் உருத்திரன் (சிவனின் அம்சம்), மருத்துக்கள், தைத்தியர்கள், ஹிரண்யன், ஹிரண்யாட்சன் உட்பட்ட அரக்கர்கள்.

அதே கஷ்யபருக்கும் - சுரபிக்கும் பிறந்தவர்கள் தான் அஷ்டவசுக்கள் (துரா, துருவா, சோமா, அஹா, அனிலா, அனலா, பிரதியுஷா மற்றும் பிரபாசா) 11 ருத்திரர்கள், மற்றும் பசுக்களும், எருதுகளும் இதில் பிரபாசன்தான் காமதேனுவின் மகளான நந்தினியை கடத்திக் கொண்டு போனதால் சாபம் பெற்று பீஷ்மராக வந்தவர்.

திதியின் மகனான ஹிரண்யகசிபுவின் மகன்கள் பிரஹலாதன், அனுக்ராதன், ஹரதன், சம்ஹிலாதன். பேரன்கள் விரோச்சனன், பேத்தி தேவாம்பா. ஹிரண்யகசிபுவின் கொள்ளுப்பேரன் மகாபலிசக்கரவர்த்தி, எள்ளுப்பேரன் பானாசுரன். பானாசுரனின் மகள் உஷா கிருஷ்ணரின் பேரனான அனிருத்தனை மணந்து கொண்டாள். அனிருத்தனின் இன்னொரு மனைவி ரோச்சனா. இவர்கள் மூலமாக வஜ்ரா மற்றும் மிருககேதனன் என்று இருமகன்கள்

(கிருஷ்ணரின் கொள்ளு பேரர்கள்). கிருஷ்ணரின் வம்சத்தில் துவாரகை அழிந்த பிறகு பிழைத்திருந்தவர் இந்த வஜ்ரா மட்டுமே. வஜ்ராவின் மகன் பிரதிபாகு, அவர் மகன் சுபாகு, அவர் மகன் சாந்தசேனன், அவர் மகன் சதசேனன்.

கஷ்யபருக்கும் மற்றுமொரு மனைவியான கத்ரூவுக்கும் பிறந்தவர்கள் தான் நாகர்கள். இந்த நாகர்கள் அறிவியலில் சிறந்தவர்கள். இவர்கள் பேசிய மொழி தமிழ் என்று கூறுகிறார்கள். கஷ்யபருக்கும் கத்ரூவின் இரட்டையான வினதாவுக்கும் பிறந்தவர்கள் கருடன் மற்றும் அருணன் (சூரியனின் தேரோட்டி). கருடன் மனைவி சுகீர்த்தி, ருத்திரை. அருணனின் மகன்கள்தான் சம்பாதி மற்றும் ஜடாயு (ராமாயணத்தில் சீதையை கடத்தும்போது போரிட்டு சிறகை இழந்து வீழ்ந்தவர்)

பிரஜாபதி கிராதுவுக்கு 60,000 மகன்கள். இவர்களை மொத்தமாக வாலகில்யர்கள் என்று குறிப்பிடுகிறார்கள். மொத்தமாக பார்த்தால் மனு - சதரூபா தம்பதிக்கு பிறந்தவர்களுக்கும், பிரஜாபதிகளின் பிள்ளைகளுக்கும் பிறந்தவர்கள்தான் தேவர்கள், அரக்கர்கள், மனிதர்கள் எல்லோருமே. இதில் அரிய, பெரிய விஷயங்கள் எதையும் செய்யாதவர்கள் அமைதியாக வாழ்ந்து மறைந்தவர்கள் எத்தனையோ பேர். அந்த வம்சங்களை பற்றிய குறிப்புகள் பாகவத புராணத்தில் இல்லை. வேறு, வேறு புராணங்களில் கிளைக்கதைகளில் இருக்கலாம்.

ஆரம்பத்தில் மனு - சதரூபாவுக்கு பிறந்த இரண்டு மகன்களுக்கு உலகை இரண்டாக பிரித்து ஆளக்கொடுத்தார்கள். இன்று பூமியில் வாழ்கிற அனைவருக்குமான ஆரம்ப புள்ளியாக இந்த விபரங்களை பாகவதபுராணம் சொல்கிறது.

---

# புதுப்பாக்கம் வீர ஆஞ்சநேயர் கோயில்

சென்னை கேளம்பாக்கத்தில் இருந்து வண்டலூர் செல்லும் சாலையில் புதுப்பாக்கம் எனற இடம் இருக்கிறது. இங்கு அழகிய கஜகிரி என்ற மலை மீது அமைந்துள்ளது வீர ஆஞ்சநேயர் கோவில். 108 படிகள் ஏறிச் சென்றால் மலை மீது அற்புதமாக அமைதியாக அருள் செய்யும் ஆஞ்சநேயரை தரிசிக்க முடியும். ஆன்மிக அதிர்வலைகளை உணர வைத்து, மனதிற்கு அமைதியை தரும் பசுமையான இந்த ஆஞ்சநேயர் கோவில் ஹனுமன் பக்தர்களுக்கு மிக முக்கியமான தலம் என்றே சொல்லப்படுகிறது. இங்கு அடிக்கடி வந்து வழிபட்டு சென்றால் நம்முடைய கர்மவினைகள் அனைத்தும் அகலும் என சொல்லப்படுகிறது.



**கோவில் தல வரலாறு :** ராமாயணத்தில் லட்சுமணரின் உயிரை காப்பாற்றுவதற்காக சஞ்ஜீவி மலையை தூக்கிக் கொண்டு வான் வழியாக அனுமன் பறந்து சென்று கொண்டிருந்த போது மாலை வேளை நெருங்கியது நித்திய கடமையான சந்தியாவந்தனம் (மாலை நேர வழிபாடு) செய்வதற்காக ஆஞ்சநேயர் இந்த மலை மீது இறங்கி உள்ளார். இங்கு பூஜை செய்து வழிபட்ட பிறகு மீண்டும் புறப்பட்டு சென்றுள்ளார். பிறகு வியாசதீர்த்தர் அனுமனுக்கு 108 கோவில்களை கட்டி வழிபட்டதாகவும், இங்கு அனுமனுக்கு சிறிய கோவில் கட்டியதாகவும் சொல்லப்படுகிறது. அவர் கட்டிய 108 அனுமன் கோவில்களை நினைவுபடுத்தும் விதமாக இங்கு 108 படிகள் அமைக்கப்பட்டுள்ளதாக சொல்லப்படுகிறது. 108 திவ்ய தேசங்களில் ஒன்றாக கருதப்படும் திருவிடந்தை ஸ்ரீ நித்ய கல்யாண பெருமாள் கோவில் பாரி வேட்டையின் போது இங்குள்ள ஆஞ்சநேயர் அங்கு கொண்டு செல்லப்பட்டு உற்சவங்கள் நடத்தப்படுவது வழக்கமாக உள்ளது.

**கோவிலின் அமைப்பு :** இந்த மலைக்கோவிலில் கையில் சஞ்ஜீவி மலையை ஏந்திய படி வடக்கு நோக்கி நாபிக்கமலத்தில் தாமரையுடன் அனுமன் வலது காலை பூமியில் ஊன்றியும், இடது காலை பறப்பதற்கு தயாராக இருப்பது போலவும் இருக்கும் நிலையில் அபய முத்திரை காட்டிய நிலையில் அருள் செய்கிறார். அதே போல் வாலில் மணி கட்டி வாலை பின்புறமாக தலைக்கு மேல் உயர்த்தி பக்தர்களுக்கு பாதுகாப்பு வழங்கும் கோலத்திலும் காட்சி தருகிறார். ஆஞ்சநேயர் சன்னதிக்கு எதிரில் ஸ்ரீ ராமர், சீதா தேவி, லட்சுமணரின் சன்னதி உள்ளது. அங்கும் ராமரின் பாதத்திற்கு அருகில் அமர்ந்த நிலையில் அனுமன் காட்சி தருகிறார்.

**கிரிவலம் செல்லும் அனுமன் :** இங்கு பக்தர்கள் வெண்ணெய் காப்பு சாற்றியும், வெற்றிலை மாலை அணிவித்தும் ஆஞ்சநேயரை வழிபடுகிறார்கள். இவரை வழிபடுவதால் தீய சக்திகளின் தொல்லைகள், நோய்கள், மன அழுத்தம். கவலை, திருமண தடைகள், பயம் போன்றவை நீங்கும். இங்கு வந்து பக்தர்கள் என்ன வேண்டிக் கொண்டாலும் நடக்கும் என சொல்லப்படுகிறது. அமாவாசை நாளில் புதிய செங்கல் வாங்கி அதில் ராம நாமம் எழுதி அதை தலையில் வைத்தபடி படியேறி வந்து ஆஞ்சநேயரை வழிபட்டால் விரைவில் வீடு கட்டும் யோகம் அமையும் என சொல்லப்படுகிறது. வாழ்க்கையில் எதுவுமே நடக்கவில்லை என்பவர்கள் இங்கு வந்து வழிபட்டு சென்றால் நன்மைகள் நடக்கும் என சொல்லப்படுகிறது. பவுர்ணமி தோறும் இங்கு ஆஞ்சநேயர் கிரிவலம் வருவதாக நம்பிக்கை. அந்த சமயத்தில் நாமும் கிரிவலம் வந்து வழிபட்டால் நாம் நினைத்த காரியங்கள் அனைத்தும் நடக்கும் என்பது நம்பிக்கை.



# செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரே இடத்தில் 108 திவ்ய தேச கோவில்கள்

செங்கல்பட்டு மாவட்டத்தில் ஒரே இடத்தில் 108 திவ்ய தேச கோவில்கள் அமைந்துள்ளது பக்தர்களிடையே பெரும் வரவேற்பைப் பெற்றுள்ளது.

செங்கல்பட்டு மாவட்டத்தில், ஏழு மலைகளுக்கு நடுவில் இயற்கை எழில் சூழ, சுயம்பு தேவியாக சொர்ண ரேகையுடன் வெளிப்பட்டவள் தேவி கருமாரி. இந்த தேவியை கருவாக வைத்து எழுப்பப்பட்டதே தேவி கருமாரி அம்மன் ஆலயம். இந்த ஆலயம் பல்வேறு சிறப்புகளை தன்னகத்தே கொண்டுள்ளது. ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோவிலைச் சுற்றி மற்ற திவ்ய தேசங்கள் சிறிய தனித்தனி ஆலயமாகக் கட்டப்பட்டடுள்ளது.

குறிப்பாக 108 வைணவ திவ்ய தேசங்களையும் ஒரே இடத்தில் தரிசனம் செய்யும் வகையிலான பிரமாண்ட ஆலய வளாகம் இங்கு அமைந்துள்ளது. ஸ்ரீவேங்கடேசப் பெருமாள் கோவிலைச் சுற்றி மற்ற திவ்ய தேசங்களும் சிறிய தனித்தனி ஆலயமாகக் கட்டப்பட்டுள்ளது. 108 திவ்ய தேச கோவில்களிலும் பகவான் எந்த ரூபத்தில் எழுந்தருளியிருக்கிறாரோ அந்த ரூபங்களாகவே இங்கு தனித்தனியாக மூலவர்களை அமைத்து பிரதிஷ்டை செய்துள்ளனர்.

இந்தியாவிலேயே முதன்முறையாக ஒரே இடத்தில் உருவாக்கப்பட்ட 108 திவ்ய தேச கோவில் இதுவாகும். இக்கோவிலுக்கு அஸ்திவாரம் தோண்டும்போது திருமாலுக்குரிய திருமண் கட்டி பாறைகள் இருந்தது இதுவே இத்தலத்தின் புனிதத்தை உணர்த்துகின்றது. திருப்பதி செல்ல இயலாதவர்கள் இங்குள்ள வெங்கடாஜலபதியை வணங்கி மனநிறைவு அடையலாம்.

செங்கல்பட்டில் இருந்து 10 கிலோ மீட்டர் தொலைவில் திருவடிசூலம் ஆலயம் அமைந்துள்ளது. பேருந்தில் வருவோர் திருவடிசூலம் என்ற இடத்தில் இறங்கி, 2 கிலோ மீட்டர் உள்ளே வர வேண்டும். திருவடிசூலம் தேவாரத் தலத்தினை அடுத்து இக்கோவில் அமைந்துள்ளது.



SINCE 1974

# SHARADHA STORE

WMB



**(ஹோம்லி டேஸ்ட் • பணிவுடன் பணிவிடை)**


Plot No: 39, Chinthamani Vinayagar Koil Street, (Opp. Periyar Park),
Ramakrishna Nagar, Valasaravakkam, Chennai - 600 087.
E-Mail : saibuju.rr@gmail.com. Ph: 98841 53428
15/5, Gandhi Street, Alwarthirunagar, Chennai - 600 087. Ph: 044 - 2377 3233

**இலவச வீட்டு டெலிவரி. உயர்தர அனைத்து விதமான மளிகை சாமான்கள் கிடைக்கும்**

**Available at Alwarthirunagar only. Timings 9 AM to 1 PM & 4 PM to 8 PM**



## தீபாவளி முன்னிட்டு முன்பதிவு ஆர்டர் எடுக்கப்படும்



கைமுறுக்கு, தட்டை,
உப்பு சீடை, வெல்ல சீடை,
அப்பம், ரவாலாடு,
மாலாடு, பயத்தலாடு,
கடலை உருண்டை,
கிருஷ்ணர் பாதம் கிடைக்கும்.

S.V.S. Refined Oil மற்றும் வெண்ணையில்
சிறந்தமுறையில் சுவையான
பட்சணங்கள் செய்து தருகிறோம்.

**Sharadha Home Made Pickles,
Home Made Sweets & Savouries**

கல்யாணம் மற்றும்
சுபகாரியங்களுக்கு தேவையான
சீர் பட்சணங்கள் சிறந்த
முறையில் செய்து தரப்படும்

சாரதாஸ் மூங்கில் அரிசி,
வரகு அரிசி, சாமை அரிசி,
குதிரைவால் அரிசி,
தினை அரிசி கிடைக்கும்.

### சீர் பட்சணங்கள்

11 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
9 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
7 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
5 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
4 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்
3 சுத்து முறுக்கு - முள்ளு தேன்குழல், சாதா தேன்குழல்

| பருப்பு தேங்காய் கூடு வகைகள் | இனிப்பு வகைகள் |
|---|---|
| லட்டு கூடு<br>மனோகர கூடு<br>மைசூர்பாகு கூடு<br>தேங்கா பர்பி கூடு<br>கடலை கூடு<br>பொட்டுகடலை கூடு<br>முந்திரி கூடு<br>ஆசிர்வாத பருப்பு<br>தேங்காய் கூடு | மைசூர்பாகு, லட்டு<br>அதிர்சம், பாதுஷா<br>சோமாசி<br>தேங்கா பர்பி<br>விருத அப்பம்,<br>காப்பரிசி,<br>புட்டு, வறுபயிறு<br>கிடைக்கும் |



**OUR HEAD OFFICE @**

No.95/51, Arya Gowda Road, West Mambalam, Chennai - 600 033.

**98408 53429 / 2489 3223**

# மயிலாப்பூர் கணபதிஸ்

Mylapore Ganapathy's Celebrating 83 Years Anniversary Since 1942

இனிய
# தீபாவளி
நல்வாழ்த்துக்கள்!



## கார வகைகள்

| கார வகைகள் | Price/Kg. |
| --- | --- |
| கை முறுக்கு | Rs. 450/- |
| தேன்குழல் முறுக்கு | Rs. 450/- |
| முள்ளு முறுக்கு | Rs. 450/- |
| பட்டர் முறுக்கு | Rs. 450/- |
| மெட்ராஸ் மிக்ஸர் | Rs. 450/- |
| ரிப்பன் பக்கோடா | Rs. 450/- |
| தட்டை | Rs. 450/- |
| பாம்பே மிக்ஸர் | Rs. 450/- |
| காரா சேவ் | Rs. 450/- |
| மிளகு சேவ் | Rs. 450/- |
| கார்ன் மிக்ஸர் | Rs. 450/- |
| காராபூந்தி | Rs. 450/- |
| ஓமப்பொடி | Rs. 450/- |
| நவதானிய மிக்ஸர் | Rs. 450/- |

## இனிப்புகள்

| இனிப்புகள் | Price/Kg. |
| --- | --- |
| லட்டு | Rs. 520/- |
| பாதுஷா | Rs. 520/- |
| ஜாங்கிரி | Rs. 520/- |
| மைசூர்பாகு | Rs. 520/- |
| அசார்ட்டட் ஸ்வீட்ஸ் | Rs. 560/- |
| பூஸ்ட் / ஹார்லிக்ஸ் பர்பி | Rs. 600/- |
| மில்க் / சாக்லேட் பர்பி | Rs. 600/- |
| அஜ்மீர் கேக் | Rs. 600/- |
| பாம்பே / கோதுமை ஹல்வா | Rs. 600/- |
| பால்கோவா / திரட்டுப்பால் | Rs. 600/- |
| நெய் மைசூர்பாகு | Rs. 900/- |
| முந்திரி ஹல்வா | Rs. 1000/- |
| பாதாம் ஹல்வா | Rs. 1200/- |
| அதிரசம் (வெல்லம் / சர்க்கரை) | Rs. 400/- |
| பொட்டுக்கடலை மாலாடு - 10 nos | Rs. 110/- |
| ரவா லாடு - 10 nos | Rs. 110/- |
| பாசிப்பருப்பு லாடு - 10 nos | Rs. 110/- |
| குலாப் ஜாமூன் - 4 pcs | Rs. 110/- |

## தீபாவளி காம்போ Rs 1000/-

| | |
| --- | --- |
| லட்டு | 250gms |
| பாதுஷா | 250gms |
| மைசூர்பாகு | 250gms |
| அதிரசம் | 250gms |
| மெட்ராஸ் மிக்ஸர் | 250gms |
| ரிப்பன் பக்கோடா | 250gms |
| பட்டர் முறுக்கு | 250gms |
| காரா சேவ் | 250gms |
| ஓமப்பொடி | 250gms |

மயிலாப்பூர் **கணபதிஸ்**® ஸ்தாபிதம் 1942

வெண்ணெய் & நெய்

பாரம்பரியமாக 1942 முதல்

**தீபாவளி லேகியம் & லேகியப்பொடி கிடைக்கும்**


**மயிலாப்பூர் கிளை :**
14, சித்திரைக்குளம் மேற்கு தெரு,
(P.K.மஹால் கல்யாண மண்டபம் அருகில்)
மயிலாப்பூர், சென்னை - 600 004
போன் : 044 - 2464 0292
செல் : 89390 27272

**மேற்கு மாம்பலம் கிளை :**
50, ஆர்ய கவுடா ரோடு, மேற்கு மாம்பலம்,
(ஷோபனா கல்யாண மண்டபம் அருகில்)
சென்னை - 600 033
போன் : 044 - 4856 6363
செல் : 89390 36363


**கடை கவுண்டர் சேல்ஸ் : 13-10-2025 முதல் 20-10-2025 வரை**

ஷாப் ஆன்லைன் www.mylaporeganapathys.com